**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107-2023**

**Prosecution witness : அ.சா.9 Date : 11.10.2023**

| | |
|---|---|
| **Name : ஆனந்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்தைதானம் பட்டி குடியிருந்து வியாபாரம் செய்து செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி மனைவி பெயர் வினுபிரியா ஆவார். 1ம் எதிரி கார்த்திக் காவல் துறையில் அயுதபடையில் வேலை செய்கிறார். 1ம் எதிரிக்கும் அ.சா1க்கும் 2016ம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் திருமணத்திற்கு செல்லவில்லை. 1ம் எதிரியும் அ.சா1 இருவரும் கோயம்புத்தூரில் வாழ்ந்தார்கள். 1ம் எதிரிக்கு கோயம்புத்தூரில் ஐஜி அலுவலகத்தில் வேலை செய்து வந்தார்.

2). பிறகு 1ம் எதிரி சேலம் மாறுதல் ஆகி வந்துள்ளார். 1ம் எதிரி அசா1 இருவருக்கும் ஒரு மகன் மகள் உள்ளார்கள். ஆனால் 1ம் எதிரி அசா1க்கும் தெரியாமல் 2வதாக நித்யா என்ற பெண்ணை திருமணம் செய்து விட்டதாக அசா1 எனக்கு தெரிவித்தார். 2வதாக திருமணம் மற்ற எதிரிகள் உடந்தையாக இருந்தும் தெரிந்தும் தான் திருமணம் செய்ததாக தெரிந்து கொண்டேன். இது பற்றி அசா1 கேட்ட போது கொலை மிரட்டல் விடுத்தாக சொன்னார்கள். இது சம்பந்தமாக அசா1 மேட்டூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- வழக்கறிஞர் ஆஜர்** இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**